# மதுரை கே.எல்.என். பொறியியல் கல்லூரியின் 30 வது ஆண்டு விழா

## டாடா கன்சல்டன்சி, முனைவர் கே.எம்.சுசீந்திரன் பங்கேற்பு



மதுரை மே 26

மதுரை கே.எல்.என். பொறியியல் கல்லூரியின் (தன்னாட்சி) 30 வது ஆண்டு விழா நடைபெற்றது. விழாவில் கல்லூரி தலைவர் மற்றும் பொறியாளர் கே.என்.கே. கார்த்திக் வரவேற்புரை ஆற்றினார். தொடர்ந்து கல்லூரி முதல்வர் முனைவர். ஏ.வி. ராம்பிரசாத் அவர்களால் ஆண்டறிக்கை வாசிக்கப்பட்டது. அதன் பின்னர் இவ்விழாவில் சிறப்பு விருந்தினராகபங்கேற்ற சென்னை Head Academic Alliance Group, டாடா கன்சல்டன்சி கே. எம். சுசீந்திரனுக்கு இக்கல்லூரித் தலைவர் அவர்களால் பொன்னாடை போர்த்தி நினைவுப் பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து கல்லூரியின் முப்பது ஆண்டு கால நிறைவை முன்னிட்டு புதிய கல்லூரிச் சின்னம் சிறப்பு விருந்தினர் அவர்களால் வெளியிடப்பட்டது. இதனை தொடர்ந்து முனைவர் சுசீந்திரன் பேசுகையில் இன்றைய மாணவர்கள் சிறந்த எதிர்காலம் பெறுவதற்கு மூன்று முக்கிய திறன்களைவளர்த்துக்கொள்ள வேண்டும்.அதில் முதலாவதாக மாணவர்கள் கல்லூரியில் தங்களது அடிப்படைக் கல்வியை ஆழமாக கற்க வேண்டும் இரண்டாவதாக ஆங்கில வழியில் திறமையாக பேசும் திறனை வளர்த்துக் கொள்ள வேண்டும் மூன்றாவதாக மாணவர்கள் தங்களது உடல் நலனை பேணிப்பாதுகாக்க வேண்டும் மேலும் ஒவ்வொரு ஆண்டும் கே.எல்.என். பொறியியல் கல்லூரியில் இருந்து 200 க்கும் மேற்பட்ட மாணவர்கள் தங்களது டி.சி.எஸ். நிறுவனத்தில் பணியில் சேர வேண்டும் என்று தான் எதிர்பார்ப்பதாக உள்ளது. என்று பல்வேறு முக்கிய கருத்துக்களை மாணவர்களுக்கு எடுத்துரைத்தார். அதன் பின்னர் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகளை வழங்கி உற்சாகப்படுத்தினார். விழா நிறைவில் பேராசிரியர் முனைவர். பிரதீப் கண்ணன் நன்றியுரையாற்றினார். இந்த நிகழ்வின் போது கல்லூரி மாணவ மாணவிகள் மற்றும் ஆசிரியர்கள் பெருமக்கள் பெருந்திரளாக கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.



# KLN College of Engineering celebrates 30th annual day

MADURAI: KLN College of Engineering (Autonomous) celebrated its 30th annual day on Saturday. In his address, president KNK Karthik commended the students and the staff for their academic achievements, underscoring the performance of the institution. Principal AV Ramprasad spoke about the college's academic achievements. Head of the Academic Alliance Group, Tata Consultancy Services, Chennai, KM Suceendran, in his address emphasised the importance of three key skill sets for students: a strong foundation in core engineering disciplines, enhanced communication skills for the global market, and a focus on personal health. He also underscored the growing job opportunities in the defense research field for core engineering branches like mechanical, civil, and EEE, and the importance of learning artificial intelligence. ENS



மதுரை கே.எல்.என். பொறியியல் கல்லூரி ஆண்டு விழா போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவிக்கு சென்னை டாடா கன்சல்டன்சி சர்வீசஸ் தலைமை நிர்வாகி சுசீந்திரன் சான்றிதழ் வழங்கினார். இடமிருந்து கல்லூரி இணை செயலாளர் பாலாஜி, தலைவர் கார்த்திக், உறுப்பினர் ரமேஷ்.



மதுரை கே.எல்.என்.பொறியியல் கல்லூரி 30-வது ஆண்டு விழாவில் மாணவிக்கு பரிசு வழங்கிய டாடா கன்சல்டன்சி சர்வீஸ் தலைவர் கே.எம்.சசீந்திரன்.

# கேஎல்என் கல்லூரி ஆண்டு விழா

● மதுரை

மதுரை கே.எல்.என். பொறியியல் கல்லூரி 30-வது ஆண்டு விழா நடைபெற்றது.

கல்லூரி தலைவர் கேஎன்கே. கார்த்திக் தலைமை வகித்தார். கல்லூரி முதல்வர் ஏ.வி.ராம்பிரசாத் ஆண்டறிக்கை வாசித்தார். இதில் டாடா கன்சல்டன்சி சர்வீஸ் தலைவர் கே.எம்.சசீந்திரன் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று பேசுகையில், 'மாணவர்கள் சிறப்பான எதிர்காலத்தை பெற அடிப்படை கல்வியை ஆழமாகக் கற்க வேண்டும். மேலும், ஆங்கிலத்தில் பேசும் திறனை வளர்த்துக்கொள்ள வேண்டும். உடல்நலனை பாதுகாக்க வேண்டும்' என்றார்.

கல்லூரியின் 30 ஆண்டு கால நிறைவையொட்டி, கல்லூரியின் புதிய சின்னம் வெளியிடப்பட்டது. பேராசிரியர் பிரதீப் கண்ணன் நன்றி கூறினார்.

# கே.எல்.என். பொறியியல் கல்லூரி ஆண்டு விழா



மதுரை அருகேயுள்ள கே.எல்.என். பொறியியல் கல்லூரியில் சனிக்கிழமை நடைபெற்ற ஆண்டு விழாவில் போட்டியில் வெற்றி பெற்ற மாணவருக்கு பரிசு வழங்கிய சென்னை டாடா கன்சல்டன்சி நிறுவனத்தின் தலைமை நிர்வாகி கே.எம். சுசீந்திரன். உடன் கல்லூரித் தலைவர் கே.என்.கே. கார்த்திக் உள்ளிட்டோர்.

**மதுரை, மே 25:** மதுரை அருகேயுள்ள பொட்டப்பாளையம் கே.எல்.என். பொறியியல் கல்லூரியில் 31-ஆவது ஆண்டு விழா சனிக்கிழமை நடைபெற்றது.

கல்லூரி வளாகக் கலையரங்கில் நடைபெற்ற இந்த விழாவுக்கு கல்லூரித் தலைவர் கே.என்.கே. கார்த்திக் தலைமை வகித்தார். முதல்வர் ஏ.வி. ராமபிரசாத் முன்னிலை வகித்தார்.

சென்னை டாடா கன்சல்டன்சி நிறுவனத்தின் தலைமை நிர்வாகி கே.எம். சுசீந்திரன் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றுப் பேசியதாவது:

இன்றைய இளம் தலைமுறையினர் உடல் நலத்தில் அக்கறையுடன் இருக்க வேண்டும். ஏனெனில், உடல் நலம் நன்றாக இருந்தால் மட்டுமே வாழ்வில் பல்வேறு முன்னேற்றங்களுக்கு அடித்தளமிட முடியும். எதிர்காலத்தில் நாம் என்னவாக நினைக்கிறோமோ அதற்கான அடித்தளத்தை கல்லூரியிலிருந்து தொடங்க வேண்டும் என்றார் அவர்.

இதைத்தொடர்ந்து பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ,மாணவிகளுக்கு பரிசு,பாராட்டுச் சான்றிதழ் அவர் வழங்கினார். இந்த நிகழ்வில் பேராசிரியர் பிரதீப் கண்ணன் உள்ளிட்ட பேராசிரியர்கள்,மாணவ,மாணவிகள் கலந்துகொண்டனர்.